இலங்கை ஆயுதப் படை வீரர்கள் மற்றும் குடும்பங்களின் புத்தகாயவிற்கான இரண்டாவது விசேட விஜயம்

இலங்கை ஆயுதப் படையின் 160 வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் புத்தகாயாவிற்கு விசேட யாத்திரைக்கான பயணத்தை ஜூன் 15-18 காலப் பகுதியில் இரண்டாவது தடவையாக இந்திய உயர் ஸ்தானிகராலம் ஏற்பாடு செய்துள்ளது . இரு நாடுகளினதும் ஆயுதப் படை வீரர்களிற்கிடையில் இடைத்தொடர்பு மற்றும் நட்பு என்பவற்றை அதிகரிக்கும் நோக்கில் இரு நாடுகளுக்குமிடையிலான கலந்துரையாடலின் அடிப்படையில் இந்த விசேட யாத்திரை ஏற்பாடு கடந்த வருடம் ஆரம்பமாகியது என்பது நினைவில் கொள்ளப்படலாம்.

இந்த வருட யாத்திரை, கடந்த வருடத்தினதை விட இரண்டிலிருந்து நான்கு என அதிகரித்த நாட்களுக்கு மட்டுமன்றி இந்தியாவிலிருந்து 160 ஆயுதப் படையினர் மற்றும் அவர்களின் குடும்பங்கள் இலங்கைக்கு பரஸ்பரம் விஜயம் செய்தல் என்பதையும் உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டதாக கட்டமைக்கப்பட்டுள்ளது . யாத்திரையின் போது , இலங்கை ஆயுதப் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் புனித மாகாபோதி ஆலயம் , 80 அடி உயர புத்தர் சிலை , ராஜ்கிர் மற்றும் நாலந்த அருங்காட்சியகம் என்பவற்றுக்கு விஜயம் செய்வார்கள். இலங்கை இராணுவத் தளபதியின் ஒரு விசேட வேண்டுகோளின் பெயரில் வரும் இந்தியக் குழுவினர் இலங்கையிலுள்ள முக்கியமான இடங்களுக்கு விஜயம் செய்வார்கள் . இது, கண்டியில் புனித தந்த ஆலயத்திற்கு விஜயம் செய்து அஞ்சலி செலுத்துதல் மற்றும் காலிக்கான விஜயம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும் . இந்திய ஆயுதப் படையினர் மற்றும் அவர்களது குடும்பங்களின் ஒரு பெரும் குழு ஒரு விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருவது இதுவே முதல் தடவையாகும். இந்திய விமானப் படையின் C - 17 குளோப்மாஸ்டர் விமானம் இலங்கை மற்றும் இந்திய பயணக் குழுவினரின் போக்குவரத்துக்காக விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலாச்சார மற்றும் வரலாற்று ஈடுபடுதல்களுக்கு மேலதிகமாக, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளினதும் ஆயுதப் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கிடையில் பெரியளவிலான இடைத்தொடர்புகளும் இதன்போது மேற்கொள்ளப்படும் . ஓர் ஆழமான மற்றும் வலுவான தொழில்சார் உறவுகளை ஏற்கனவே பகிர்ந்து கொள்ளும் இரண்டு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கிடையில் தனிப்பட்ட மற்றும் நிலையான பிணைப்புகளுக்கான ஒரு சிறந்த தளத்தினை இது வழங்கும்.

இலங்கைக்கான, இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து மற்றும் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க ஆகியோர் இலங்கைக்கு வரும் இந்தியக் குழுவினரை வரவேற்பதற்கும் மற்றும் இலங்கைக் குழுவினரை இந்தியாவிற்கு வழியனுப்பி வைப்பதற்குமாக விமான நிலையத்தில் இருந்தனர். இரு தரப்பிலுமிருந்தான பயணிகள் இந்த விசேட விஜயம் குறித்தான தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

****

கொழும்பு
15 ஜூன், 2019